**செய்தி வெளியீடு எண்:599** **நாள்: 05.04.2024**

# செய்தி வெளியீடு

இந்திய தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜூவ்குமார் அவர்கள் மற்றும் தலைமைத் தேர்தல் ஆணையர்கள் திரு. கயனேஷ்குமார் , திரு. சுக்பீர்சிங் சாந்து ஆகியோர் தலைமையில் 2024- மக்களவைத் தேர்தலில் குறைவான வாக்குப்பதிவு நடைபெறுகின்ற நகரங்களில் வாக்குப்பதிவினை அதிகரித்தல், வாக்குப்பதிவு தினத்தில் வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்துதல் போன்றவை குறித்து சம்பந்தப்பட்ட மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகள், மாநகராட்சி ஆணையாளர்கள் மற்றும் தேர்தல் அலுவலர்களுடன் காணொளி வாயிலாக ஆலோசனைக் கூட்டம் இன்று (05.04.2024) டெல்லியில், நடைபெற்றது.

இக்கூட்டத்தில், சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி/ முதன்மைச் செயலாளர் திரு. சத்யபிரத சாகு, இ.ஆ.ப., கூடுதல் தலைமைத் தேர்தல் அலுவலர் திரு. சங்கர்லால் குமாவத்,இ.ஆ.ப., இணை தலைமைத் தேர்தல் அலுவலர்கள் திரு. ஸ்ரீகாந்த், இ.ஆ.ப., திரு. அரவிந்தன் ஆகியோர்கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் ,இந்திய தலைமைத்தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின் அடிப்படையில் மக்களவைத் தேர்தலில் குறைவான வாக்குப்பதிவு நடைபெறுகின்ற டில்லி, மும்பை, சென்னை , பெங்களூரு, ஹைதராபாத், அகமதாபாத், புனே,தானே, நாக்பூர், பட்னா சாகிப் ,லக்னோ, கான்பூர் நகரங்களைச் சார்ந்த ஆணையாளர்கள் மற்றும் பீகார், உத்தரப்பிரதேசம் மாநிலங்களிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டத்தேர்தல் அதிகாரிகளுடன் ஆலோசனை நடைபெற்றது.

**தலைமைத் தேர்தல் அதிகாரி**

**தமிழ்நாடு.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in